# முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

செ.வெ.எண் 67 **9–7–2008**

நான் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதி அண்மையில் வெளியிடப்பட்டுள்ள திரைப்படம் “உளியின் ஓசை” க்காக – அந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் எனக்கு அளித்த 25 இலட்சம் ரூபாயில்; அந்தத் தொகைக்கு நான் கட்ட வேண்டிய வருமான வரி போக எஞ்சிய தொகையை – தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர், இயக்குநர் ராமநாராயணன் அவர்கள் மூலமாக – திரைப்படத் துறையைச் சேர்ந்த நலிந்த தொழில் நுட்பக் கலைஞர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கு வதற்காக இன்றையதினம் அளிக்கின்றேன்.

2004–2005ஆம் ஆண்டுகளில் இது போலவே நான் எழுதிய “கண்ணம்மா” திரைப்படத்திற்கான 10 இலட்சம் ரூபாயையும், “மண்ணின் மைந்தன்” திரைப்படத்திற்கான 11 இலட்சம் ரூபாயையும் ஆக மொத்தம் 21 இலட்சம் ரூபாயை “சுனாமி” நிவாரண நிதிக்காக அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களிடம் என் மகன் மு.க. ஸ்டாலின் மூலமாக வழங்கியதைப் போலவே இப்போது இந்த “உளியின் ஓசை” திரைப்படத்திற்கு கிடைத்த தொகை யையும், திரைப்படத்துறையைச் சேர்ந்த நலிந்த தொழில் நுட்பக் கலைஞர்களுக்காகவே அளித்துள்ளேன்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9